www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V10T

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

# வகுப்பு 10

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 8×1=8**

1) 'வீட்டைத் துடைத்து சாயம் அடித்தல்' - இவ்வடி குறிப்பிடுவது ..............
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

2) ஆசிரியப்பாவிற்கு உரிய ஓசை ..............
அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

3) மேன்மை தரும் அறம் என்பது ..............
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

4) 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

5) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்'. மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

6) புறத்திணைகள் ..............
அ) 10 ஆ) 12 இ) 13 ஈ) 14

"மாற்றம் என்பது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!"

7) இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
அ) ஞானம் ஆ) சிலப்பதிகாரம் இ) காலக்கணிதம் ஈ) மெய்க்கீர்த்தி

8) சீர்மோனையை எடுத்து எழுதுக.
அ) மாற்றம் - மகத்துவம் ஆ) மானிடம் - மாறும்
இ) எவ்வெவை - ஏகுமென் ஈ) மாற்றம் - மானிடம்

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி: 3×2=6**

9) **ஏற்ற வினா அமை:**
அ) சிலப்பதிகாரம் தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி. கருதினார்.
ஆ) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார்.

10) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

11) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

12) காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

13) வாய்மை பற்றி சங்க இலக்கியங்கள் கூறும் செய்தியை எழுதுக.

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி: 3×2=6**

14) **பொருத்தமான தொடர் அமைக்க:**
அ) மறக்க நினைக்கிறேன் ஆ) முன்னுக்குப் பின்

15) **மரபுத் தொடருக்கான பொருள் அறிந்து தொடரில் அமைத்து எழுதுக:**
அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப்போடுதல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



16) சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக:
கானடை

17) கலைச்சொல் அறிக:
அ) Revivalism ஆ) Guild

18) ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக:
அ) உதகமண்டலம் ஆ) திருநெல்வேலி

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 4×3=12**

(குறிப்பு: 24-ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

19) வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

20) அறங்கூறவையம் - குறிப்பு வரைக.

21) "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

22) 'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்பு ஒன்றை உருவாக்குக.

23) கீழ்க்காணும் திருக்குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக:
"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

24) அடிபிறழாமல் எழுதுக:
"தூசும் துகிரும் ..........." எனத் தொடங்கும் சிலப்பதிகாரம் பாடல்.

**V. விடையளி: 2×5=10**

25) அ) சிலப்பதிகார மருவூர்ப் பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

26) அ) மொழிபெயர்க்க:
Among the five geographical divisions of the Tamil country in sangam literature, the Marutham region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**(அல்லது)**

ஆ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



**VI. விரிவாக விடையளி: 1×8=8**

27) அ) சங்க இலக்கியங்களில் காணப்படும் ஐந்து அறங்களைத் தொகுத்து, அவை இன்றும் தேவையே என்பதனை நிறுவுக.

**(அல்லது)**

ஆ) மங்கையராய்ப் பிறப்பதற்கே ......... என்ற தலைப்பில் குறிப்பிடப்படும் சாதனை மகளிரில் நால்வரைப் பற்றித் தொகுத்து எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com